# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**********************

## பூரண புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் இந்தியாவில் இந்தி மொழி கற்கைநெறியினை பயில 22 இலங்கை மாணவர்கள் தெரிவு

இந்திய அரசாங்கத்தின் முழுமையான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியாவில் இந்தி மொழியினை பயில்வதற்காக நாடளாவிய ரீதியிலிருந்து 22 இலங்கை மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இம்மாணவர்கள் உத்தரப்பிரதேசத்தின் ஆக்ராவில் உள்ள இந்தி மத்திய நிலையத்தில் ஒன்பது மாத டிப்ளமோ கற்கை நெறியினை தொடரவுள்ளனர். இலங்கை உட்பட 26 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் குறித்த புலமைப் பரிசில் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2. குறித்த மாணவர்கள் இந்தியாவிற்கு பயணிப்பதற்கு முன்னர் 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதியன்று அம்மாணவர்களைச் சந்தித்திருந்த இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார, மொழி, இலக்கிய மற்றும் மத ரீதியான பல்லாயிரம் ஆண்டுகால பழமை வாய்ந்த உறவினை மேலும் வலுவாக்குவதில் இந்தி மொழியினதும் இலக்கியத்தினதும் வகிபாகத்தினை சுட்டிக்காட்டினார். அத்துடன் அவர்களின் இந்திய பயணத்திற்காக தனது நல்வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.

3. இலங்கையில் மிகவும் பிரபலமான வெளிநாட்டு மொழிகளில் ஒன்றான இந்தி இலங்கையில் உள்ள புகழ்மிக்க பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் உட்பட 80 நிறுவனங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

4. இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் குறித்த புலமைப் பரிசில் திட்டத்தை வழங்கும் செயற்பாடுகளை 2011 ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வருகின்றது. “வெளிநாடுகளில் இந்தி ஊக்குவிப்பு” என்ற தலைப்பிலான இந்த புலமைப் பரிசில் கடந்த 12 வருடத்தில் இலங்கையைச் சேர்ந்த 160 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடம் இலங்கையிலிருந்து அதிகளவான மாணவர்கள் குறித்த புலமை பரிசில் திட்டத்துக்காக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

*********************

கொழும்பு
31 ஆகஸ்ட் 2023